IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP No.292/2014 Date: 21.09.2023.

PW1- மாரக்காள்

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

விபத்து சம்பந்தமாக நான் போலீஸ் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு 2 மகன்கள், 2 மகள்கள் அவர்கள் தனிதனியாக வசிக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு தனிதனி குடும்ப அட்டை உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த பின்பு என் மகள் செல்வராணி என் கணவருடன் மருத்துவமனைக்கு சென்றார். 1 ம் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனம் என் கணவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனத்திற்கு எந்த சேதாரமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் கணவரின் வருமானத்தை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதால் மருத்துவ செலவு இல்லை என்றால் சரிதான். நான் தற்போது கூலி வேலை செய்கிறேன். நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 3 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-மாரக்காள்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.